# வாக்குத்தான் மனிதனின் வெகுமதி அளித்திடுவீர், பெறுமதி ஆக்கிடுவீர்!

## நோர்வேவாழ் தமிழ் மக்களே வலுச்சேர்ப்போம் வாருங்கள்,

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் உங்கள் வாக்குகளைப் பெறுமதியாக்குங்கள். தமிழரின் கொள்கையை ஏற்றுக் கொண்ட ஒரு கட்சிக்கு, உங்கள் வாக்குக்களை அளித்திடும் இவ்வேளையில்,

- தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து நிற்கும் ஒரே கட்சியும்
- வன்னியிலே பல்லாயிரம் தமிழரை - எம் உறவுகளைக் கொடுங்கோன்மை அரசு கொன்றுகுவித்தவேளை நாம் ஆற்றொணாத் துயரில் மூழ்கி அல்லற்பட்டுச் சிந்திய கண்ணீரோடு நின்றோம். அப்பொழுது, ஈழத்தமிழரின் பாரிய இனஅழிப்பை எதிர்கொண்டு எமக்காக ஆதரவுக்குரல் தந்த கட்சியும்
- நீதியான சமதர்மக் கொள்கைக்காகப் பாடுபடும் கட்சியும்
- நோர்வேயில் வெளிநாட்டவர் தாய்மொழிக் கல்வியை அரச சேவையாக நிலைநிறுத்த விரும்பும் கட்சியும் மாகிய

சிவப்புக்கட்சியிலிருந்து ஒருவர் நாடளுமன்றத்தில் தெரிவு செய்யப்படுமிடத்து, எம் இனத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கொடிய இன அழிப்புப்பற்றி நோர்வே நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், சிவப்புக்கட்சிக்கு ( RØDT/RV ) உங்கள் வாக்குகளை இடும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.